

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்.

**RHODE ISLAND TAMIL SCHOOL**

**ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி**

# இப்பள்ளி ஆண்டின் இறுதி செய்திமடல்

முயற்சி செல்வத்தைச் சேர்க்கும்; முயலாமல் இருப்பது வறுமைக்குள் சேர்ந்து விடும்.

**Effort brings fortune's sure increase, Its absence brings to nothingness**

## பள்ளியின் அறிவிப்புகள் !!

- ஜூன் 2, 2024 அன்று பள்ளி ஆண்டு நிறைவடைந்தது.
- 2024-25ம் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது.
- பெருமையுடன் ஜூன் 1, 2024 அன்று ரோட் ஐலண்ட் தமிழ்ப் பள்ளி இணையதளம் அறிமுகப்படுத்தப்பட்டது: https://ritamilschool.org
- கீழே உள்ள இணைப்பைப் பயன்படுத்தி பதிவு செய்யவும்: https://www.ritamilschool.org/student-registration-form-2024-2025/
- அடுத்த கல்வி ஆண்டில் பள்ளி, நேர்நிலை முறையாக நடைபெறும். இடம்: 40 Astral Street, Warwick, RI 02888.
- மேலும் தகவல்களுக்கு ரோட் ஐலண்ட் தமிழ்ப் பள்ளி இணையதளத்தை பின்தொடரவும்.

## மழலை - அ பிரிவு



## மழலை - ஆ பிரிவு



## முத்தமிழ் முத்துக்கள்

### இயற்றமிழ்

இயற்றமிழ் என்பது இயல்பாக ஒருவர் மற்றொருவருடன் உரையாடும் உரையாடலே ஆகும். அக்காலத்தில் இயற்றமிழை கொண்டுதான் இயற்கல்வி வழங்கிட முடியும்.

ஒருவர் பிறந்தது முதல் இறப்பது வரை தனது பெற்றோர், நண்பர், உற்றார் மற்றும் உறவினர்களுடன் உரையாடி பல தகவல்களை அறிந்துகொள்வார். இதில் பெருமளவு வினா விடை முறையிலான உரையாடலே அதிகமிருக்கும்.

இயற்கல்வியின் மூலமாக கிடைக்கும் அறிவே நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கு போதுமானதாகவும் இருந்தது.

பொதுவாக தமிழ் இலக்கணம் என்பது இயற்றமிழ் இலக்கணத்தைக் குறிப்பதாயிற்று. எழுத்து, சொல், பொருள், செய்யுள் மற்றும் உரைநடை ஆகியவற்றின் தொகுதி இயற்றமிழாகும்.

இயற்றமிழ் நாடகத் தமிழுக்கும், இசைத் தமிழுக்கும் உயிர் போன்றதாகும். இதனாலேயே இயற்றமிழை முதலில் வைக்கப்பட்டது என்பர்.

இயற்றமிழ் மேடைப்பேச்சு, இயல்பான பேச்சு, எழுத்து வடிவங்கள், பட்டிமன்றங்கள், இலக்கியங்கள் என்று பல்வேறு துறைகளில் வளர்ந்து கொண்டிருக்கிறது இன்றைக்கு கணினி வரையிலான கல்வி இதன் விரிவு ஆகும்.

## நரியும் ஆமையும்



ஒரு பெரிய காட்டுல ஒரு ஆமையும், நரியும் நண்பர்களாக இருந்துச்சு. அந்த ஆமைக்கு அதோட கனமான ஆமை ஓட்ட பிடிக்கல, இப்படி கனமான ஓடு இருக்கிறதுனால தான் தன்னால வேகமா ஓட முடியல, பறக்க முடியலன்னு, வருத்தப்பட்டுச்சு அந்த ஆமை.

“கடவுள் கொடுத்த உடம்பு, ஏன் எப்பவும் ஒவ்வொரு விலங்குக்கு மாறுபட்டு இருக்குனு யோசிச்சது?”. இதைப் பாத்துட்டுயிருந்த நரி உடனே ஆமை கிட்ட “ஒவ்வொரு மிருகத்துக்கு தனித்துவமான உடல்வாகை கடவுள் ஏன் கொடுத்திருக்கிறாரு தெரியுமான்னு என கேட்டுச்சு நரி. எனக்கு ஒன்னும் தெரியாது, நீ தான் சொல்லேனு சொல்லுச்சு ஆமை .

உடனே நரி சொல்லுச்சு ஒவ்வொரு மிருகத்தோட வாழ்விடத்தை பொருத்து, இயற்கை கிட்ட இருந்தும், ஒவ்வொரு மிருகத்துக்கும் பொதுவா ஏற்படுகிற ஆபத்திலிருந்து காப்பாத்திக்கிடவும், அந்தந்த மிருகங்களுக்கு தேவையான உடல் அமைப்ப கொடுத்திருக்கிறாரு கடவுள். உன்னோட உடம்புல இருக்குற கனமான ஓடு, உனக்கு உதவி செய்யறதுக்கு தான் அமைஞ்சிருக்கும். அதனால, அந்த ஓட்ட பார்த்து வருத்தப்படாதன்னு ஆறுதல் சொல்லுச்சு நரி.

இத கேட்ட பிறகும் ஆமைக்கு திருப்தியில்ல. அப்பத்தான் ஒரு வேடன் அந்த நரியை தன்னோட வில்லுல குறி வச்சிருக்கிறத பார்த்துச்சு ஆமை.

உடனே அந்த நரிய காப்பாத்த குறுக்க வந்து நின்னுச்சு ஆமை, வேடன் விட்ட அம்பு ஆமையோட முதுகுல பட்டு கீழ விழுந்துடுச்சு. இத பார்த்த நரி நேரா வேடனை நோக்கி ஓடுச்சு, நரி தன்னை நோக்கி வர்றத பார்த்த வேடன் உடனே அங்க இருந்து ஓடிட்டான்.

இப்ப பார்த்தியா? உன்னோட கனமான ஓடுதான் உன்னையும், என்னையும் காப்பாத்துச்சு. “அதே நேரம் உன்னோட ஓடு மட்டும் இல்லைனா?” வேடன் விட்ட அம்பு உன்ன கொன்னுருக்கும். இனிமே உன்னோட உடம்ப பத்தி யோசிக்காம நல்லபடியா வாழ்க்கைய நடத்துனு சொல்லுச்சு நரி . நரி சொன்ன உண்மைய புரிஞ்சிகிட்ட ஆமை, அதுக்கு அப்புறமா நல்ல படியா வாழ்ந்துச்சு.

## நினைவு நாளேடு

### மே தினம்

மே தினம் அல்லது தொழிலாளர் தினம் என்பது, இந்தியா உட்பட பல நாடுகளில், மே 1 அன்று, தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் இயக்கம் செய்த வரலாற்றுப் போராட்டங்கள் மற்றும் வெற்றிகளை நினைவுகூரும் நாளாகும். 1904 இல், பல்வேறு அமைப்புகள் "அனைத்து சமூக ஜனநாயகக் கட்சி அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு, பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கக் கோரிக்கைகளுக்காகவும், உலகளாவிய அமைதிக்காகவும், அனைத்து நாடுகளில், மே முதல் தேதியன்று, எட்டு மணி நேர வேலைக்கான சட்டப்பூர்வ ஸ்தாபனத்திற்காக ஆற்றலுடன் ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும்" என்று அழைப்பு விடுத்தன. இதுவே பின்னர் 160 நாடுகளில் மே தினமாக கடைப்பிடிக்கப்பட்டது.

### அன்னையர் தினம்

அன்னையர் தினம் என்பது தாய்மையை போற்றும் ஒரு விடுமுறையாகும், இது உலகம் முழுவதும் வெவ்வேறு வடிவங்களில் அனுசரிக்கப்படுகிறது. அமெரிக்காவில், அன்னையர் தினம் 2024 மே 12, ஞாயிற்றுக்கிழமை அன்று கொண்டடபடுகிறது. வரலற்றில் மற்றும் உலகம் முழுவதிலும் தாய்மை பற்றிய பல கலாச்சார வேறுபாடுகள் மற்றும் மாறுபட்ட எதிர்பார்ப்புகள் இருந்தாலும், ஒன்று மாறாமல் உள்ளது: குழந்தைகள் அவர்களின் வாழ்க்கையில் செழிக்க, தாய்மார்கள் ஒரு தனித்துவமான, முக்கியமான, மதிப்புமிக்க பங்கைக் கொண்டுள்ளனர் என்று.

### மெமோரியல் தினம்

மெமோரியல் தினம் என்பது ஒரு அமெரிக்க விடுமுறையாகும், இது மே மாதத்தின் கடைசி திங்கட்கிழமையில் அனுசரிக்கப்படுகிறது. இது அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றிய போது இறந்த வீரர்களை நினைவுகூரும் நாள். இந்த வருடம், மெமோரியல் தினம் திங்கட்கிழமை, மே 27 அன்று அனுசரிக்கப்படும். 1860 களின் பிற்பகுதியில், உள்நாட்டுப் போருக்குப் பிறகு, பல்வேறு நகரங்களிலும் உள்ள அமெரிக்கர்கள் இந்த எண்ணற்ற வீழ்ந்த வீரர்களுக்கு வசந்த கால அஞ்சலிகளை நடத்தத் தொடங்கினர், அவர்களின் கல்லறைகளை மலர்களால் அலங்கரித்து பிரார்த்தனைகளை வாசித்தனர். இது 1971 இல் அதிகாரப்பூர்வ கூட்டாட்சி விடுமுறையாக மாறியது.

மனம்
உண்டானால்
இடம் உண்டு

RHODE ISLAND TAMIL SCHOOL
ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி

# இப்பள்ளி ஆண்டின் இறுதி செய்திமடல்

நாளைய வாழ்க்கையை
சிறப்பாக மாற்றுவது,
இன்றைய எண்ணங்களும்
செயல்களுமே

**ஜூன் மாதம் மலர்ந்த மொட்டுக்கள் :**

- அத்விக் கிருஷ்ணன்
- அர்விந்த் வினோத் குமார்
- அர்ஜூன் சாரதி
- அதிதி ஸ்ரீ குமரவேல்
- கனிஷ்கா பாஸ்கர்
- சர்வேஷ் ரவிசங்கர்
- சித்தாரா சிதம்பரம்
- ஸ்ரீ சன்ஷிதா தவகுரு




**ஜூலை மாதம் மலர்ந்த மொட்டுக்கள் :**

- அபிநிதா பிரபு
- ஆதியா அரவிந்த்
- காவ்யா கபிலன்
- கிரிஷிவ் பழனியப்பன்
- சாருமதி பாலகுமாரன்
- செழியன் கண்ணதாசன்
- தக்ஷ் கிருஷ்ணன்
- தளபதி ராஜேஷ்குமார்
- தேவ்தக்ஷின் சந்துரு
- பிரஜித் ஜீவா
- புகழினி சயீந்திரன்
- ரித்விக் பாலாஜி
- ஹைடின் பிரிட்டோ

**ஆகஸ்ட் மாதம் மலர்ந்த மொட்டுக்கள் :**

- ஆதனா அரவிந்த்
- ஆதிரா மகேஷ்குமார்
- சஞ்ஜித்கிருஷ்ணா சுப்பிரமணியன்
- சாரா கார்த்திக்
- சாரா பிரான்சிஸ்
- தரூண் கார்த்திக்
- பாவ்னாஸ்ரீ கார்த்திக்
- வர்னிக்கா ரியான் அருண் பிராபகர்
- ஷர்வேஷ் முருகன்



ஜூன்,ஜூலை,ஆகஸ்ட் மாதங்களில் பிறந்தநாள் கொண்டாடும் நம் பள்ளி செல்வங்களுக்கு, இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!

# ஆண்டு விழா கொண்டாட்டம்












முயற்சி செய்து
கொண்டே இரு. ஒரு
நாள் தோல்வி
தோற்றுப்போகும் உன்
முயற்சியிடம்.

RHODE ISLAND TAMIL SCHOOL
ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி

**இப்பள்ளி ஆண்டின்
இறுதி செய்திமடல்**

தோற்காமல் வென்றவர்கள்
யாரும் இல்லை; தோற்று
விட்டோம் என்று கவலைப்படாமல்
வெல்வது எப்படி என்று யோசி
வெற்றி நீச்சயம் கிடைக்கும்!

---

# ஆண்டு விழா கொண்டாட்டம்


















பயத்தையும்
தயக்கத்தையும்
தூக்கிப்போடு. வெற்றி
உனது !

ரோட் ஐலண்ட் தமிழ்ப் பள்ளி
• 2017 •

RHODE ISLAND TAMIL SCHOOL
ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி

# இப்பள்ளி ஆண்டின் இறுதி செய்திமடல்

சுமைகளை கண்டு
துவண்டு விடாதே..
இந்த உலகத்தை
சுமக்கும் பூமியே உன்
காலடியில் தான்.

---

# பள்ளியின் முதலாம் பட்டமளிப்பு விழா















# முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்

– பழமொழி

RHODE ISLAND TAMIL SCHOOL

ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி

# இப்பள்ளி ஆண்டின் இறுதி செய்திமடல்



எந்த ஏற்றத்துக்கும் ஒரு இறக்கம் உண்டு, எந்தத் துன்பத்துக்கும் ஒரு இறுதி உண்டு, எந்த முயற்சிக்கும் ஒரு பலன் உண்டு

– மகாகவி பாரதியார்

## ஆசிரியர் படைப்பு !




**அக்ஷயா மீனாட்சிசுந்தரம்**

**நிலை 1 - ஆ ஆசிரியை**

## மாணவர்களின் படைப்புகள்!

### நிலை 1 - அ பிரிவு





**சர்வேஷ் மகேந்ரா சபரிவேல்**

**நிலை 1 - ஆ**



**ஸ்ரீ பெரியநாயகி அடைக்கப்பன்**

**நிலை - 6**

### ஏப்ரல் விளையாட்டுப் போட்டிகளின் விடைகள்!

குறுக்கெழுத்து போட்டி

| மேலிருந்து கீழ் | இடமிருந்து வலம் |
|---|---|
| 1, மலைகளின்அரசி | 1. மயில்வாகனம் |
| 2. வானிலை அறிக்கை | 4. அலைவரிசை |
| 3. கத்தரிக்கோல் | 6. அறிவு |
| 5. சைவம் | 7. அணி |
| 8. எழுத்து | 9. கைகழுவுதல் |
| 10. தம்பி | 11. சிம்பு |
| 12. புவி | 13. விலை |
| | 14. தும்பி |

### கண்டுப்பிடியுங்கள் !



### மே மாதம் மலர்ந்த மொட்டுக்கள் :

மே மாதத்தில் பிறந்தநாள் கொண்டாடிய நம் பள்ளி செல்வங்களுக்கு, இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!




- அகிலன் அரவிந்த்
- கவிநயன் கபிலன்
- கிருத்திக் கேசவ் கோவிந்தராஜு
- யாசிதா பிரவின் மனோஜ்
- ஸ்ரீதர் வெங்கடகிருஷ்ணன்



### தன்னார்வ குழு உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | - | திரு. கார்த்திக் பாலசுப்பிரமணியன் |
| செயலாளர் | -. | திரு. விஜயகுமார் சபாபதி |
| பொருளாளர். | - | திருமதி. சாருலதா ரவிஷங்கர் |
| முதல்வர் | - | திருமதி. ரமா சுப்பிரமணியன் |
| நிர்வாகி | -. | திருமதி. சத்யப்பிரியா மாணிக்கவாசகம் |
| குறைதீர்க்கும் குழு | - | அரவிந்த் பழனிசுவாமி, உண்ணாமலை முருகப்பன், கவிதா முருகேசன் |
| பள்ளிக்குழு | - | ஐடா மெர்லின் ராஜகுமார், கண்ணன் ராஜசிங்கம், காமேஸ்வரி ராஜாராம், நித்யா வடிவேலு, பவித்ரா இரத்தினவேல், பிரகாஷ் முத்தையன், பிரதீபா முருகன், மனோத் ராஜகோபால், விஜய் ராஜேந்திரன், ஜெப்ரி ஜெயசிங் |

உங்கள் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன:

கதைகள், கட்டுரைகள், வரைபடங்கள், விடுகதைகள், சிறு குறிப்புகள், குறுஞ்செய்திகள் போன்ற உங்கள் படைப்புகளை அடுத்த மாதம் 15-ஆம் தேதிக்குள் RITAMILSCHOOL@GMAIL.COM என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இணையதளம்: HTTPS://WWW.RITAMILSCHOOL.ORG/

முகநூல்: HTTPS://WWW.FACEBOOK.COM/RITAMILSCHOOL